**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 152/2019**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW-2**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தமிழ்வேந்தன் | த/பெ.: | சுந்தர்ராஜன் |
| கிராமம்: | பெருகவாழ்ந்தான் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 38 | முகவரி: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **09.10.2025.**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 13 ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். ஏற்கனவே என்னுடைய தாயார் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக 7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்தது. எனது தாயாருக்கு வயது முதிர்வு காரணமாகவும் உடல்நிலை சரியில்லாமல் போனதாலும் அவரால் நீதிமன்றத்திற்கு ஆஜராக முடியாத நிலையை தெரிவித்து அவரது சாட்சியத்தை நீக்கரவு செய்ய சமூகம் நீதிமன்றத்திற்கு தெரிவித்து அதன்படி எனது தாயார் சாட்சியம் 22.09.2025 ம் தேதியன்று நீக்கரவு செய்யப்பட்டது. ஏற்கனவே எனது தாயார் மூலமாக குறியீடு செய்யப்பட்ட 7 ஆவணங்களையும் மீண்டும் என் மூலமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 28.04.1962 | அண்ணாசாமி ஐய்யங்காருக்கு சீனிவாச ஐயங்கார் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட சுத்த கிரய சாசனம் | சார்பதிவக நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 15.02.1996 | சுந்தர்ராஜன் அர்வகளுக்கு வடிவேலு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட சுத்த கிரய சாசனம் | சார்பதிவக நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 01.11.2017 | பாகவிடுதலை பத்திரம் | சான்றிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 28.02.2019,<br>10.08.2021,<br>04.05.2023 | வழக்கு சொத்திற்கான வீட்டு வரி ரசீது (கோர்வை 3) | அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 01.02.2024 | வழக்கு சொத்திற்கான சொத்து வரி இரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 2021-2022 | குடிநீர் கட்டண இரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 22.08.2021 | வழக்கு சொத்துக்களை காட்டக்கூடிய புகைப்படங்கள் (3), சிடி (1) இரசீது கோர்வை | அசல் |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசார</u>ணை - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.